### நீண்ட, நெடிய நட்பின் உணர்வோடும், உரிமையோடும் பயணிக்கிறோம்!

# இசுலாமிய மக்களின் வளர்ச்சிக்காக - உரிமைக்காக தொடக்க காலம் முதல் அரணாகத் திகழ்கிறது தி.மு.கழகம்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மிலாதுன் நபி வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஆக.27-

**நீண்ட, நெடிய நட்பின் உணர்வோடும், உரிமையோடும் பயணிக்கிறோம் என்றும், இசுலாமிய மக்களின் வளர்ச்சிக்காக - உரிமைக்காக தொடக்க காலம் முதல் அரணாகத் திகழ்கிறது தி.மு.கழகம் என்றும் மிலாதுன் நபி வாழ்த்துச் செய்தியில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து "கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் மீலாதுன் நபி வாழ்த்துச் செய்தி" வருமாறு:-

நபிகள் நாயகத்தின் பிறந்தநாளான மீலாதுன் நபியைக் கொண்டாடிடும் இசுலாமியச் சகோதரர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றவர்களின் மனதை புண்படுத்தாதீர்கள் என அன்பையும், கல்வி கற்பது ஆண் - பெண் இருவரின் கடமை என அறிவையும், ஒருவனுடைய உழைப்புக்கு அவனுடைய உழைப்பின் வியர்வை உலருவதற்குள் ஊதியத்தைக் கொடுத்து விடு எனத் தொழிலாளர்களின் உரிமையையும், எப்போதும் உண்மையையே பேச வேண்டும் எனப் பொய்யாமையையும், வறியவருக்கு உதவிடும் இரக்கச் சிந்தனையையும் வலியுறுத்திய பெருமகனார் அண்ணல் முகமது நபி அவர்கள்.

அத்தகைய நபிகள் நாயகம் காட்டிய வழியில் பிறழாது நடக்கும் இசுலாமிய மக்களின் வளர்ச்சிக்காகவும், அவர்தம் உரிமைகளுக்காகவும் தொடக்க காலம் முதலே அரணாகத் திகழும் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். பேரறிஞர் அண்ணா அவர்களும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் முதன்முதலாகத் திருவாரூரில் சந்தித்துக் கொண்டதே நபிகள் நாயகம் விழாவில்தான். கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்களின் காலந்தொட்டே திராவிடப் பெருந்தலைவர்கள் பலர் மீலாதுன் நபி விழாக்களில் தொடர்ந்து பங்கேற்று வந்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் 1969ஆம் ஆண்டிலேயே மீலாதுன் நபிக்கு அரசு விடுமுறை அளித்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். மேலும், உருது பேசக்கூடிய முஸ்லிம்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தது 3.5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கியது, சிறுபான்மையினர் நல ஆணையம் அமைத்தது, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மற்றும் உருது அகாடமி தொடங்கியது என எல்லா வகையிலும் இசுலாமியப் பெருமக்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்ட இயக்கம் தி.மு.கழகம்.

குடியுரிமைத் திருத்தச் சட்டம், வக்பு வாரியத் திருத்தச் சட்டம் என இஸ்லாமியர்களுக்கு எதிரான சட்டங்களை ஒன்றிய அரசு கொண்டுவந்தபோதெல்லாம் போராட்டங்கள், நீதிமன்ற வழக்குகள், சட்டபேரவைத் தீர்மானங்கள் என இசுலாமியரின் பாதுகாப்பு அரணாகத் திகழ்ந்தது நமது திராவிட மாடல் அரசு. இதனால்தான், எவராலும் அசைத்துப் பார்க்க முடியாத பாச உறவாக தி.மு.கழகத்துக்கும் இசுலாமியர்களுக்குமான உறவு தொடர்கிறது.

இப்படிப்பட்ட நீண்ட நெடிய நட்பின் உணர்வோடும் உரிமையோடும் நபிகள் நாயகம் காட்டிய அன்பு வழியில் பயணித்திடும் என் நெஞ்சுக்கினிய இசுலாமியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது மீலாதுன் நபி வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### 74வது பிறந்த நாள்: மனித நேயர்

# கேப்டனின் பணிகள் என்றென்றும் நிலைத்திருக்கும்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, ஆக. 27 -

கேப்டன் விஜயகாந்த் அவர்களின் 74வது பிறந்த நாளையொட்டி, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தனது சமூக வலை தளத்தில் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:

**தே.மு.தி.க நிறுவன தலைவர் அண்ணன் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் பிறந்த நாள் இன்று!**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீது அளவற்ற அன்பும் கழகத்தலைவர் @mkstalin அவர்களுடன் நெருங்கிய நட்பும் கொண்டிருந்தவர்.**

**ஏழை எளிய மக்களின் நலனுக்காக களத்தில் இறங்கி உழைத்த மனித நேயர் அண்ணன் கேப்டன் அவர்களின் பணிகள் என்றென்றும் நிலைத்திருக்கும்!**

அவர் புகழ் ஓங்கட்டும்!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### கொளத்தூர் தொகுதி த.வெ.க. வேட்பாளரின் வெற்றியை எதிர்த்து

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழக்கு : உயர்நீதிமன்றத்தில் விசாரணை!

சென்னை, ஆக.27-

**சென்னை கொளத்தூர் தொகுதியில் த.வெ.க. வேட்பாளரின் வெற்றியை எதிர்த்து தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தொடர்ந்துள்ள வழக்கு, உயர்நீதிமன்றத்தில் அடுத்த வாரம் விசாரணைக்கு வருகிறது.**



நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் கொளத்தூர் தொகுதியில் 6 வாக்குச் சாவடிகளில் பதிவான வாக்குகள் மற்றும் வி.வி.பேடு ஒப்புகை சீட்டுகளை ஒப்பிட்டுப் பார்த்ததில் பல்வேறு முறைகேடுகள் கண்டறியப்பட்டன. பல வாக்குச் சாவடிகளில் வாக்குப்பதிவு இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டு முறைகேடு நடந்துள்ளதாகவும், பல வாக்குப்பதிவு இயந்திரங்களில் மென்பொருள் கோளாறு ஏற்பட்டதாகவும் புகார் எழுந்தது. பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளதால் அனைத்து வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வி.வி.பேடுகளை சரிபார்க்க வேண்டும் என்றும், த.வெ.க. வேட்பாளர் வி.எஸ்.பாபு வெற்றி பெற்றதை செல்லாது என அறிவிக்க வேண்டும் என்றும் கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் தி.மு.க. தலைவர்மு.க.ஸ்டாலின்வழக்கு தொடர்ந்தார்.

இந்நிலையில், இந்த வழக்கை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என மூத்த வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன் நீதிமன்றத்தில் முறையீடு செய்தார். அப்போது, வாக்குப் பதிவு இயந்திரங்கள் சரிபார்ப்பு பணியில் முறைகேடுகள் நடந்துள்ளதால், விவிபேட் எந்திரங்களை 100 சதவீதம் சரிபார்க்க உத்தரவிடவேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார். இதனையடுத்து வழக்கை அடுத்த வாரம் திங்கள் அல்லது செவ்வாய்க்கிழமையில் விசாரிப்பதாக தலைமை நீதிபதி அமர்வு அறிவித்தது.

### திரிணாமுல் காங்கிரசில் இருந்து தாவிய

# 20 எம்.பி.க்களுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ்!

*புதுடெல்லி, ஆக.27-*

*நடந்து முடிந்த மேற்கு வங்க சட்டமன்ற தேர்தலில் பா.ஜ.க. 207 இடங்களில் வெற்றி பெற்ற நிலையில் திரிணாமுல் காங்கிரஸ் 80 இடங்களில் வென்றது.*

*இருந்தபோதும் அதில் 50க்கும் மேற்பட்ட எம்.எல்.ஏ.க்கள் தனி அணியாக பிரிந்தனர்.*

*எண்ணிக்கையின் அடிப்படையில் அவர்களையே சட்டமன்ற எதிர்க்கட்சியாக சட்டமன்ற சபாநாயகர் அங்கீகரித்தார்.*

*இதனிடையே மத்தியிலும் திரிணாமுல் காங்கிரஸ் மக்களவை மாநிலங்களவை எம்.பி.க்கள் இடையே பிளவு ஏற்பட்டது. 20 திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி.க்கள் திரிணாமுல் காங்கிரசில் இருந்து விலகி என்சிபிஜ என்ற பிராந்திய கட்சியில் இணைந்து பா.ஜ.க.வின் என்டிஏ கூட்டணிக்கு ஆதரவளிப்பதாக அறிவித்தனர். மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா அவர்களின் முடிவை அங்கீகரித்தார்.*

*மோடி தலைமையிலான என்.டி.ஏ. எம்.பி.க்கள் கூட்டத்திலும் இந்த 20 பேர் பங்கேற்றனர். இதனிடையே கட்சி மாறிய எம்.பி.க்களை தகுதி நீக்கம் செய்யக்கோரி திரிணாமுல் காங்கிரசில் மம்தா தலைமையிலான அணி சபாநாயகரை அணுகியது. மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் தேசிய பொதுச்செயலாளரும் எம்.பி.யுமான அபிஷேக் பானர்ஜி இதுதொடர்பாக சபாநாயகரை அணுகிறார்.*

*இந்த 20 எம்.பி.க்களையும் தகுதிநீக்கம் செய்யக் கோரி சபாநாயகர் ஓம் பிர்லாவிடம் ஜூனில் மனு அளித்தும், ஆகஸ்டில் நேரில் சந்தித்தும் எந்த முடிவும் எடுக்கப்படாமல் காலதாமதம் செய்யப்பட்டதால், அபிஷேக் பானர்ஜி உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.*

*திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டு வென்ற 20 மக்களவை எம்.பி.க்கள் வேறு கட்சிக்கு ஆதரவு தெரிவிப்பது அல்லது இணைவது கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்படி தகுதி நீக்கம் செய்ய உத்தரவிட வேண்டும் என அவரது மனுவில் தெரிவித்தார்.*

*உச்சநீதிமன்றம் தலையீடு*

*இந்த மனு இன்று தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதி ஜாய்மால்யா பாக்சி மற்றும் நீதிபதி வி. மோஹனா ஆகியோர் அடங்கிய உச்சநீதிமன்ற அமர்வில் விசாரணைக்கு வந்தது. வழக்கு தொடர்பாகத் தங்களது விளக்கத்தை அளிக்குமாறு 20 எம்.பி.க்களுக்கும் நோட்டீஸ் அனுப்பி உத்தரவிடப்பட்டது.*

*இந்த விவாகரத்தில் சபாநாயகரின் காலதாமதத்தை சுட்டிக்காட்டியபோதும் மக்களவை சபாநாயகர் ஒரு அரசியலமைப்புப் பதவி என்பதால் அவருக்கு நேரடியாக நோட்டீஸ் அனுப்ப உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டது.*

*சபாநாயகர் தரப்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, சபாநாயகர் ஏற்கனவே இது தொடர்பாக நடவடிக்கைகளை தொடங்கி உள்ளதாக தெரிவித்தார்.*


### திட்டம் தொடர வேண்டும் என்பதே எங்கள் நிலைப்பாடு! பல்வேறு ஆய்வுகளுக்குப் பிறகுதான் இடம் தேர்வு!

# பரந்தூர் விமான நிலையத் திட்டத்தைக் கைவிடுவது; தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கே பாதகமாகும்!

## சட்டப்பேரவையில் - முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு பேச்சு!

சென்னை, ஆக.27-

**சட்டப்பேரவையில் பேசிய முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு, பரந்தூர் விமான நிலையத்தை தொடர வேண்டும் என்பதே எங்களுடைய நிலைப்பாடு. இத்திட்டத்தை கைவிடுவது தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கே பாதகமாக இருக்கும் என்று குறிப்பிட்டார்.**



தமிழ்நாடு சட்டப்பேரவையில் நேற்று முன்னாள் அமைச்சரும், திருச்சுழி சட்டமன்ற உறுப்பினருமான தங்கம் தென்னரசு பேசியதாவது:-

பரந்தூர் விமான நிலையத் திட்டம் எதற்காக கொண்டுவரப்பட்டது என்பதை நான் நேற்றைய செய்தியாளர் சந்திப்பிலேயே விரிவாக விளக்கியி ருந்தேன். சென்னை நகரின் புவியியல் அமைப்பிலேயே, வேறு எந்த இடத்திற்கும் விமான நிலையத்தை மாற்றுவது சாத்தியமில்லை என்பது புரியும். விமான நிலையம் அமைத்திட நாங்கள் நேரடியாக சென்று உடனடியாக பரந்தூரைத் தேர்வு செய்துவிடவில்லை. பல்வேறு இடங்கள் ஆய்வு செய்யப்பட்ட பிறகே இந்த பரந்தூர் தேர்வு செய்யப்பட்டது.

ஒரு விமானநிலையத்தை அமைப்பதற்கு முன்பு இந்திய விமான நிலைய ஆணையத்தின் (AAI) ஒப்புதல் பெறப்பட வேண்டும். அதற்காக சோழிங்கநல்லூர், படாளம், பன்னூர் உள்ளிட்ட பல இடங்கள் ஆய்வு செய்யப்பட்டன. ஆனால் ஒவ்வொரு இடத்திலும் தொழில்நுட்ப மற்றும் செயல்பாட்டு காரணங்களினால் இந்திய விமான நிலைய ஆணையம் (AAI) அவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை.

சென்னையின் கிழக்குப் பகுதியில் வங்கக்கடல் இருப்பதால் அங்கு விமான நிலையம் அமைக்க இயலாது. வடக்குப் பகுதியில் மணலி, எண்ணூர் உள்ளிட்ட தொழிற்பேட்டைகள் உள்ளன. பழவேற்காடு ஏரி போன்ற இடங்கள் சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளாக உள்ளன. எனவே அந்தப் பகுதிகளும் பொருத்தமற்றதாக கருதப்பட்டன.

இதைத்தொடர்ந்து, தெற்குப் பகுதியில் சோழிங்கநல்லூர் உள்ளிட்ட இடங்கள் ஆய்வு செய்யப்பட்டன. ஆனால் அவை தாம்பரம் விமானப்படைத் தளத்தின் வான்வெளிக்கு அருகில் இருப்பதால் அங்கு விமான நிலையம் அமைப்பது சாத்தியமில்லை. மேலும் தெற்கில் கல்பாக்கம் அணுமின் நிலையமும், வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயமும் உள்ளன. எனவே அந்தப் பகுதிகளும் நிராகரிக்கப்பட்டன.

இதன் காரணமாகவே மேற்குப் பகுதியில் விமானநிலையம் அமைப்பதற்கான இடத்தை தேர்வு செய்ய நேரிட்டது. அப்போது பன்னூர் மற்றும் பரந்தூர் ஆகிய இரண்டு இடங்கள் ஆய்வு செய்யப்பட்டன. இந்த இரு இடங்களுக்கும் இடையில் விரிவான ஒப்பீட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் அடிப்படையில் பணிகள் துவங்கின.

முன்னதாக, ஒரு இடத்தைத் தேர்வு செய்யும்போது தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் முக்கியமாக பார்க்கப்படுகின்றன. அந்தப் பகுதியில் உயரழுத்த மின் கம்பிகள், பெரிய தொழிற்சாலைகள் இருந்தால் அவற்றை இடமாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்படுமா போன்ற அம்சங்களும் ஆய்வு செய்யப்படுகின்றன.

அதேபோல், எந்த ஒரு திட்டமாக இருந்தாலும் நிலம் தேவைப்படுகிறது. குறிப்பாக, நிலம் கையகப்படுத்தப்படும்போது அப்பகுதியில் வாழும் மக்களை இடமாற்றம் செய்ய வேண்டிய சூழல் ஏற்படலாம். எனவே தேர்வு செய்யப்படும் இடத்தில் குறைந்த எண்ணிக்கையிலான மக்கள் மட்டுமே பாதிக்கப்படுவதை கணக்கிட்டு உறுதி செய்யவேண்டும். இந்த மதிப்பீடுகளின் அடிப்படையில்தான் பரந்தூர் தேர்வு செய்யப்பட்டது. மேலும் நிலத்தின் விலை உள்ளிட்ட பொருளாதார காரணிகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

எனவே பரந்தூர் தேர்வு செய்யப்பட்டதற்குப் பின்னால் எந்தவிதமான உள்நோக்கமும் இல்லை. இது முழுக்க முழுக்க தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் மற்றும் ஆய்வுகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவாகும். இதில் மாநில அரசு மட்டுமல்ல, ஒன்றிய அரசும் ஈடுபட்டுள்ளது. பல்வேறு இடங்களை ஆய்வு செய்த பிறகு, இந்திய குடிமை விமானப் போக்குவரத்து அமைச்சகம் இறுதியாக பரந்தூருக்கே ஒப்புதல் வழங்கியது. அதனால்தான் இந்த இடம் தேர்வு செய்யப்பட்டது. அதைத்தாண்டி தனிநபர் விருப்பத்திற்காக எதுவும் செய்யப்படவில்லை.

இப்போது மாற்று இடங்களை மீண்டும் ஆய்வு செய்ய வேண்டும் என்று கூறப்படுகிறது. ஆனால் எந்த புதிய இடத்தை ஆய்வு செய்தாலும் இதே போன்ற சிக்கல்கள் எழும். அங்கும் விவசாய நிலங்கள் இருக்கும்; அங்கும் நிலம் கையகப்படுத்த வேண்டியிருக்கும்; அங்கும் மக்கள் பாதிக்கப்படக் கூடும். அதே மதிப்பீடுகளை மீண்டும் நீங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

இந்தத் திட்டம் பல ஆண்டுகளாக பல்வேறு ஆய்வுகள், அனுமதி நடைமுறைகளைக் கடந்து இன்றைய நிலையை அடைந்துள்ளது. இந்த நிலையில் அதை கைவிட்டால், மீண்டும் இதுபோன்ற ஒரு திட்டம் எப்போது நடைமுறைக்கு வரும் என்பது கேள்விக்குறியாகிவிடும்.

சிலர் தற்போதைய சென்னை விமான நிலையத்தையே விரிவுபடுத்தலாம் என்று கூறுகின்றனர். ஆனால் அங்கு இரண்டாவது ஓடுபாதை அமைப்பது எப்படி சாத்தியமாகும். சென்னை விமான நிலையத்தைச் சுற்றியுள்ள மக்கள் அடர்த்தியை கருத்தில் கொண்டால், மீனம்பாக்கம் மற்றும் அதன் சுற்றுவட்டாரங்களில் எத்தனை பேரை இடமாற்றம் செய்ய வேண்டியிருக்கும். அங்கு ஏற்படும் சமூக மற்றும் நிர்வாகச் சிக்கல்கள் இதைவிட அதிகமாக இருக்கும்.

ஆகவே, பரந்தூர் விமான நிலையத் திட்டம் தொடரப்பட வேண்டும் என்பதே எங்களுடைய நிலைப்பாடு. ஏற்கனவே அப்பகுதியில் சுமார் 2,500க்கும் மேற்பட்ட பட்டா நில உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டு, நிலம் கையகப்படுத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளது. இந்நிலையில் திட்டத்தை கைவிடுவது தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கே பாதகமாக இருக்கும்.

ஒருபுறம் தமிழ்நாட்டை 1.5 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்ற வேண்டும் என்று கூறிக் கொண்டே, மறுபுறம் அதற்கு அடித்தளமாக அமையும் முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்களை எதிர்ப்பது முரண்பாடான நிலைப்பாடாகும். இது தான் எங்களுடைய நிலைப்பாடு, அதைத்தான் நாங்கள் விளக்குகிறோம்.

இவ்வாறு தங்கம் தென்னரசு பேசினார்.

# கவலை!



மேகதாத்
விவகாரம்

தொகுதி மறுவரையறை

பரந்தூர்
விமான நிலையம் என

தமிழகத்தின்
அதிமுக்கிய
தேவைகளில்

த.வெ.க.வின்
முதிர்ச்சியற்ற
முடிவுகளால்

பேரிழப்பும்
தமிழகத்தின்
வளர்ச்சிக்கு
பெரும் குந்தகமும்
ஏற்படுமோ என்னும்
கவலை
மக்களிடம்
உருவாகி வருகிறது..

**என்னநாஞ் சொல்றது...!**



**மருது அழகுராஜ்**

கழக செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்